

சிவகங்கையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சான்றிதழ் வழங்கினார். உடன் எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பொறுப்பு சே.மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## தி.மு.க. மீனவர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளரின் ஒப்புதலோடு ஈரோடு வடக்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஆகிய மாவட்டங்கள் மற்றும் நாகர்கோவில் மாநகர தி.மு.க. மீனவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - ஜி.கே.செல்வராஜ், 1/2, பெரியார் நகர், மொடச்சூர், கோபி.

துணைத் தலைவர் - கே. சேட் ' 5/408/3, தண்ணீர் பந்தல், கள்ளிப்பட்டி , கோபி.

அமைப்பாளர் - எஸ்.முருகன், 32/2, அண்ணா நகர், பவானிசாகர்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ.செல்வராஜ், புங்கார், பவானிசாகர். 2) எஸ்.குமார், 69, மீனவர் வீதி, கூத்தனூர், ரங்கசமுத்திரம், சத்தி. 3) எம்.சுப்பிரமணியம், 13, அண்ணா நகர், பவானிசாகர். 4) ஆர்.மூர்த்தி, 2/68, சித்தன்குட்டை, பெரியகள்ளிப்பட்டி, பவானிசாகர். 5) ஒ.ஆர்.பாலுச்சாமி, 336, ஒசைப்ட்டி, வே.வெள்ளாளபாளையம், அந்தியூர்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - குட்டி (எ) டி. சண்முசுந்தரம் 3/255, மெயின் ரோடு, சாவக்கட்டுப்பாளையம், தத்தனூர் கிராமம், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 638460.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. ஆறுச்சாமி 6/105, கானூர், அவிநாசி, திருப்பூர் - 641655. 2) பி. முருகேஷ் 141ஏ, காவேரி நகர், 15.வேலம்பாளையம், திருப்பூர் - 641603. 3) அ. முருகேசன் 1/151டி, பீம் கார்டன், வலசுபாளையம், பெருமாநல்லூர், திருப்பூர் - 641666. 4) கே. வினோத் 8/9, நேரு வீதி, குமரானந்தம், திருப்பூர் - 641602. 5) பி. கோபாலன் 5, ஆலத்தூர், அவிநாசி, திருப்பூர்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - எஸ். கமால்தீன் 39, அழகப்பா நகர், சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ந. பரந்தாமன் ஊஞ்சவேலாம்பட்டி, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஏ.டி. வாசு (எ) திருமலைவாசகன் 4/167, டீச்சர்ஸ் குடியிருப்பு, தேவனூர்புதூர் அஞ்சல், உடுமலை வட்டம், திருப்பூர் மாவட்டம் - 642207.

துணை அமைப்பாளர்கள் - 1) திருமலைசாமி 15/79, பாரஸ்ட் பங்களா, அமராவதி நகர், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642102. 2) எம். ஆறுமுகம் 1/67, மீனவர் தெரு, கொழுமம், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். 3) ரா. அசோக்குமார் 1/202, கணேசாபுரம், எஸ்.வி. மில், கணக்கம்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 4) சு. பழனிச்சாமி 1/32, கிழக்கு தெரு, கல்லாபுரம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். 5) அ. முகமது அமானுல்லா 14/337/1, கான்ட்ராக்டர் குடியிருப்பு, அமராவதி நகர், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642102.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

### நாகர்கோவில் மாநகரம்

தலைவர் - மா. ஜோசப் காலின்ஸ் 63இ/6இ, பெருமாள் நகர், பட்டகசாலியன்விளை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629002.

துணைத் தலைவர் - டி.ஜெ. முலாடு ரொட்ரிகோ 53/59, சவேரியார் கோவில் தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629002.

அமைப்பாளர் - அ. சகாய ஸ்டீபன் 56, சேவியர் காலனி, முதலியார்விளை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629002.

துணை அமைப்பாளர்கள் - 1) எப்.எ. மகேஷ் 60ஏ, புனித சவேரியார் கோவில் வடக்கு தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 2) செ. ட்ராஸ்டன் பெர்னாண்டோ 18/8, மகாத்மா காந்தி தெரு, மூவேந்தர் நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 3) மா. மார்டின் ஜவஹர் ஜானி, 15டி/12, வாகிசம் பிள்ளை தெரு, பொன்னப்பநாடார் காலனி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 4) இ. இசக்கி மணி 33, ஆர்.சி. பரதர் தெரு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 5) எ. ரீமஸ் 39, ஆர்.சி. பரதர் தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். 6) மா. சரவணன் 130ஏ, பறக்கை ரோடு, இளங்கடை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் மத்திய மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு.நந்தகோபால் அவர்கள் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை மாவட்ட அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கே.ஆர்.எஸ். மணி (எ) ஈஸ்வரமூர்த்தி** (2/208, கேஆர்எஸ். தோட்டம், செவந்தாபாளையம், முத்தனம்பாளையம் அஞ்சல், திருப்பூ - 641 606) அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### திருச்சி தெற்கு மாவட்டம்

### திருச்சி கிழக்கு மாநகர அமைப்பாளர், தலைவர் நியமனம்

திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி கிழக்கு மாநகர மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.என். செய்யதுபாவா பகுருதீன் அவர்களுக்கு பதிலாக **ஏ.பெஞ்சமின்** (37/45, கான்மியான் மேட்டுத் தெரு, திருச்சி-1) அவர்கள் திருச்சி கிழக்கு மாநகர மீனவர் அணி அமைப்பாளராகவும் - மாநகர மீனவர் அணித் தலைவராக நியமிக்கப்பட்ட வி.குமார் மறைவெய்தியதால், திரு.எஸ். என்.செய்யது பாவா பகுருதீன் அவர்கள் திருச்சி கிழக்கு மாநகர மீனவர் அணித் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-10-2025.

டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி.

# பண்ருட்டி நகராட்சி வார்டு சிறப்பு கூட்டம்!

### நகரமன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

கடலூர், அக்.31-

கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகராட்சி சார்பில் வார்டு சிறப்புக் கூட்டம், தட்டாஞ்சாவடியில் உள்ள தனியார் மண்டபத்தில், புதன் கிழமை நடைபெற்றது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணையின் படி, நகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்திட அந்தந்த பகுதி நகர்மன்ற உறுப்பினர்கள் தலைமையில் நகராட்சி அலுவலர் ஒருவரை கூட்டுநராக கொண்டு பொதுமக்கள் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் பங்கேற்கும் வகையில் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்கள் நடத்த அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி பண்ருட்டி நகராட்சி பகுதிகளில் மொத்தம் உள்ள 33 வார்டுகளில, செவ்வாய்க் கிழமை, 16 வார்டுகளில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தி முடிக்கப் பட்டன.

இரண்டாம் நாளான, 29 .10.2025, புதன் கிழமை, காலை 11 மணியளவில், 2, 4,7,9,11,13,14,17,19,21,23,25,27,29,31,32 மற்றும் 33 ஆகிய வார்டு பகுதிகளில் அந்தந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

பண்ருட்டி நகராட்சி 26 வது வார்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைப்பெற்ற சிறப்பு கூட்டத்திற்கு நகர்மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான க.இராஜேந்திரன் தலைமை தாங்கி பொதுமக்களிடம் தேவைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

மேலும் நகரின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தரப்படும் என உறுதியளித்து பேசினார்.

கூட்டத்தில் நகராட்சி ஆணையர் காஞ்சனா,வருவாய் அலுவலர் மற்றும் கூட்டுநர் அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பூங்கா ஆக்கிரமிப்பை அகற்றி நடைப்பாதை அமைத்து தர வேண்டும். குடிநீர் வசதி ஏற்படுத்த தர வேண்டும். நியாயவிலை கடை அமைத்து தர வேண்டும். தெரு விளக்கு அமைத்து தர வேண்டும். வடிகால் வாய்க்கால் உள்ளிட்ட கோரிக்கைகள் முன் வைத்தனர். கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் இக்கூட்டத்தில் வார்டு அவை தலைவர் மோகன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் லோகநாதன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஏழுமலை வார்டு செயலாளர்கள் முருகன் செல்வகுமார் நகர தொண்டரணி அமைப்பாளர் தயாளன் வட்ட பிரதிநிதி அம்சா அல்லி முத்து வார்டு பொருளாளர் ஸ்ரீகாந்த் இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாலச்சந்தர் ராஜா நகர தகவல் தொழில் பணி அமைப்பாளர் மோகன் மற்றும் வார்டு பகுதி பொதுமக்கள் குடியிருப்போர் நல சங்க பிரதிநிதிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



முத்துராமலிங்கத் தேவரின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது முழு உருவச்சிலைக்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" குறித்த கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சீர்திருத்தப் பணிகள் குறித்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ, தனச்செல்வம், வக்கில் பாலாஜி, வடிவேல் முருகன், சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன், நேருபாண்டியன், ஆர்.கணேசன், மதுரை பாலா, கலை கார்த்திகேயன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு-ஆலங்குளத்தில் உற்சாக வரவேற்பு!

### இரா.ஆவுடையப்பன் – வே.ஜெயபாலன் – ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில்!

தென்காசி. அக்.31-

தென்காசியில் நடைபெற்ற அரசு விழா நிகழ்வில் 2,44,469 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும்' முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைப்பதற்கும்,புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிடவும்,புதிய அறிவிப்பு களை வெளியிடவும் வருகை தந்த திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) ம் தேதி

நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மிகவும் உற்சாகமான, எழுச்சியான,சிறப்பான வரவேற்பு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் கொடுக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு,கழக துணைப் பொதுச் செயலாளர் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி,நிதி மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.ஜீவன்ஜீவன்,வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ்,கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி ஆகியோர்கள் பங்கேற்றனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29ஆம் தேதி) அரியநாயகிபுரத்திலிருந்து புறப்பட்டு காலை 10:30 மணி அளவில் ஆலங்குளம் வருகை தந்த போது நெல்லை மேற்கு மாவட்டம்,தென்காசி தெற்கு மாவட்டம்,தென்காசி வடக்கு மாவட்டம் ஆகிய கழக மாவட்டங்கள் சார்பில் மாவட்டங்களை உள்ளடக்கிய ஆலங்குளம்,தென்காசி,கடையநல்லூர், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளை சார்ந்த சுமார் 25,000 ம் பேர்கள் கலந்து கொண்ட உற்சாகமான வரவேற்பு ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் சார்பில் கொடுக்கப்பட்ட வரவேற்புகளை திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஆலங்குளம் சாலையில் இருந்து தென்காசியில் அரசு விழா நடைபெறும் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானம் வரும் வரை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் ஏற்பாட்டில் 15 இடங்களில் மேடை அமைத்து அரசின் திட்டங்கள் விளக்குகின்ற வகையில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டிருந்தது. தென்காசி மாவட்டம் முழுவதும் வழி நெடுகிலும் கழக இரு வண்ணக் கொடிகள் 3 கழக மாவட்டங்கள் சார்பில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீ குமார், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்ம நாபன்,தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ். அப்துல்காதர்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச் செல்வி, மாவட்ட பொருளாளர் எம்.ஏ.எம்.ஷெரிப், தென்காசி நகர செயலாளர் நகர்மன்ற தலைவர் ஆர். சாதிர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. ஆர்.கிருஷ்ணராஜா,

மாநில பொதுக்குழு உறுப்பினர் க.இராஜேஷ்வரன், தென்காசி ஒன்றிய முன்னாள் செயலாளர் இராமையா என்ற துரை, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் செல்வ விநாயகம், சண்முகராஜ்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன், தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ். டி.சீனிவாசன்,மாவட்ட வழக்கறிஞர் அணி பி.பொன்ராஜ், தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் க.சுமதி,

சிவகிரி சுமதி மருத்துவமனை டாக்டர். வி. சைலேஷ், தொகுதி பார்வையாளர்கள் கணேஷ்குமார் ஆதித்தன் (ஆலங்குளம்) டாக்டர் கலை கதிரவன் (தென்காசி) மாவட்ட அவைத்தலைவர்கள் சுந்தர மகாலிங்கம், சுப்பையா, மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, ராஜதுரை, புனிதா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சேக்தாவுது, ஆ.பிரபாகரன், முத்துப்பாண்டி, ஆறுமுகச்சாமி, சேசுராஜன்,பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, ரஹீம்,தேவா, அருள், தமிழ்ச்செல்வி,

மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை,லாலா சங்கரபாண்டியன்,பொன்.முத்தையா பாண்டியன்,வெள்ளத்துரை, ராமச்சந்திரன்,பால்ராஜ்,பெரியதுரை, திவான் ஒலி,சீனித்துரை,ஷேக் முகமது, ஜெயக்குமார்,ஜெயா ரமேஷ் ,அன்பழகன், அழகு சுந்தரம்,நகர செயலாளர்கள் வெங்கடேசன்,கணேசன்,அப்பாஸ், பீரப்பா, பிரகாஷ்,

பேரூர் செயலா ளர்கள் குட்டி, முத்தையா, சுடலை, பண்டாரம், கே.டி.சி.குருசாமி, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென்காசி)சுப்பம்மாள் (கடையநல்லூர்) கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி,மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், பிரேம் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன், ராமராஜன், கருப்பணன், அரசு வழக்கறிஞர்கள் வேலுச்சாமி,மருதப்பன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பின்னர் மாலையில் திராவிட மாடல் முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் குற்றாலம் சுற்றுலா மாளிகையில் இருந்து மாலை 630 மணி அளவில் புறப்பட்டு கடையநல்லூர் வழியாக மதுரை செல்லும் வழியில் கடையநல்லூர் மணிக்கூண்டு முன்பு கடையநல்லூர் கிழக்கு ஒன்றியம் மற்றும் கடையநல்லூர் வடக்கு, தெற்கு நகர தி.மு.க சார்பில் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை தலைமையில் 2000 க்கும் மேற்பட்டோ பங்கேற்று சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

# கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் BLA2, BDA ஆலோசனைக் கூட்டம்!

### ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ப.கோவிந்தராசன், கே.பழனியப்பன் அறிக்கை!

நாகை. அக். 31 -

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்த ராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பழனியப்பன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எசை எனப்படும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து நமது பணிகள் மற்றும் கடமைகள் குறித்து கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய மற்றும் கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய ஆலோசனைக் கூட்டம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழிகாட்டுதலின் படி வரும் நாளை (1.11.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு கீழ்வேளூர் சண்முகா திருமண மண்பத்தில் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்தில் தலைமைக் கழகத்தின் சார்பில் உரிய விளக்கமளிக்க உள்ளார்கள். எனவே இக் கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள்,

பூத் ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்த ராசன் கூறியுள்ளார்.



கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகராட்சி சார்பில் வார்டு சிறப்புக் கூட்டம், தட்டாஞ்சாவடியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைப்பெற்றது. நகரமன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கி குறைகள கேட்டறிந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார். நகராட்சி ஆணையர் காஞ்சனா,வருவாய் அலுவலர் மற்றும் கூட்டுநர் அசோகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.